
ISBN : 978-93-81006-11-5

# பழந்தமிழர் வாழ்வும் வரலாறும்

## இன்பம்



பதிப்பாசிரியர்

செம்மூதாய் சதாசிவம்

முனைவர் அ. அமலஅருள்அரசி

முனைவர் அ.ம. சோனல்

# நூல் விபரம்

நூல் பெயர் : **பழந்தமிழர் வாழ்வும் வரலாறும்** (இன்பம்)

பொருள் : ஆய்வுக் கட்டுரைகள்

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : மார்ச், 2016

வெளியீடு : **செம்மூதாய் பதிப்பகம்**
ஏ3, அபிராமி நிவாஸ், 43 வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 059.
கைபேசி : 9444200369 / 9444327963

கணினி : **செந்தமிழ் தட்டச்சு மையம்**, சென்னை.

அட்டைப்படம் : **திரு. கண்ணன்**, மதுரை.

அச்சாக்கம் : **நோவினா ஆப்செட் பிரிண்டிங்**,
164, வி.ஆர்.பிள்ளை தெரு,
ஐஸ் அவுஸ், சென்னை - 600 005.

பக்கங்கள் : XVI + 496 = 512

விலை : **உரூ. 400 /-**

ISBN : 978 - 93 - 81006 - 11 - 5

**PAZHANTHAMIZHAR VAZHVUM VARALARUM** (INBAM)

Copyright : Editor's

First Edition : March, 2016

Published : **Semmoodhai Pathippagam**
A3, Abirami Nivas, 43 Valmiki Street
East Tambaram, Chennai-600 059.
Cell : 944200369 / 9444327963

Computer : **Senthamizh Typing Centre**, Chennai.

Printing at : **Novena Offset Printing Co.**,
No. 164, Venkatarangam Street,
Ice House, Chennai - 600 005.

Pages : XVI + 496 = 512

Price : **Rs. 400/-**

67. **முனைவர் ம. நூர்ஜஹான்**
பழந்தமிழரின் அகவெளிப்பாடுகள் 280

68. **செ. இந்திரா**
குறுநில மன்னர்கள் 284

69. **எஸ். முரளி**
இசை கருவிகள் - தவில் 289

70. **சே. சலோமி இராஜரீகம்**
பழந்தமிழரின் விருந்தோம்பல் 292

71. **பா. பிரியா**
நற்றிணையில் பறவைகள் 296

72. **அ. ஜெயபாரதி**
சங்க கால குறுநிலமன்னர் பாரி 300

73. **முனைவர் க. முத்துஇலக்குமி**
உப்பு வாணிபமும் குறவர் வாழ்வியலும் 303

74. **முனைவர் ந. அருள்மொழி**
அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் 308

75. **முனைவர் க. பூபதி**
சங்க கால திருமணம் 313

76. **முனைவர் த. மேனகா**
பண்டைய இசையும் இசைஇயம்பு கருவிகளும் 317

77. **முனைவர் ப. வனிதாராணி**
பிரிவின் வகைகள் 322

78. **திருமதி சீ. தவமணி**
பழந்தமிழர் காட்டும் ஐவகை நிலத்தின் இயல்புகள் 327

79. **க. பரமேஷ்**
தமிழர் நாட்டுப்பாடல்கள் 332

80. **V. Pushparani**
Socio-Cultural History of Tamilnadu 337

81. **க. காமாட்சி**
தமிழர் வறுமை வாழ்க்கை 342

82. **சோ. இலக்கியா**
பயனாக்க இலக்கணங்களின் உருவாக்கமும் 347

83. **முனைவர் இரா. டயனாகிறிஸ்டி**
பாணர்கள், புலவர்களின் இலக்கியப் பயணம் 352

# 83. பாணர்கள், புலவர்களின் இலக்கியப் பயணம்

**முனைவர் இரா.டயானாகிறிஸ்டி**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வுமையம்
பாத்திமாகல்லூரி
மதுரை - 625 018.

## முன்னுரை

பழந்தழிழகத்தில் பாணர்களும் புலவர்களும் சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும், கல்வியில் சிறந்தவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். அவற்றை அவர்களது இலக்கியப் பதிவுகளே வெளிப்படுத்துகின்றன. இவர்கள் சங்கச் சான்றோர்களாய் வலம் வந்து தமிழகத்தின் கலை, பண்பாடு, வாழ்வியல் நெறிகள், போன்றவற்றைக் காத்துவந்த கல்வித் தூதுவர்களாக விளங்கியவர்கள். நாட்டை நல்வழிப்படுத்தும் ஆசான்களாக அரசவையில் தலைமை வகித்து, தன்மானம் காத்து பெருமைக்கு உரியவர்களைப் புகழ்ந்து, பெருமை இழந்தவரைப் பாட மறுத்து, செந்நெறிக் காவலர்களாயத் திகழ்ந்துள்ளனர். அவர்களது இலக்கியப் பயணம் விட்டுச்சென்ற அடையாளங்களை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பாணர்களும், புலவர்களும்

பழந்தமிழகத்தின் இசைத்தமிழ், கூத்து எனப்படும் நாடகத்தில் வல்லுனர்களாகத் திகழ்ந்தவர்கள் பாணர்கள். பாணர்கள் பாடல், ஆடலில் சிறந்தவரும் கருவி இசைப்பவரும் கருவி செய்பவரும் அவர்தம் பெண்டிரும் கூடிய ஒரு தொகுதியினரே ஆவர். (பாணர், இரா.இளங்குமரன் ப.2) சமுதாயத்தின் குரலாகவும் அரசவை, மக்கள் அவையிலும் களிப்பூட்டுவராகவும் திகழ்ந்தவர்கள். புகழுரைகள் போர்ச்சிறப்புக்கள் கூறும் வீரக்கதையைப் பாடுவதுடன் போர்களத்தின் நடுவே வீரர்களுக்கு ஊக்கமும் ஆற்றலும் பெருகப் பண்பாடியுள்ளனர். இவர்கள் அரசர்களின் தூதுவர்களாகப் போர்க்களத்திற்கு வருவதும் உண்டு. போக்களம் புகுவர், புலவர் பாண், கூத்து, விறல் என்ற சொற்களின் அடியாகப் பாணர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

புலவர்கள் கல்வி, புலமை, தகுதி ஆகியவற்றுடன் கவித்துவ உத்திகள் சிறக்க உணர்த்தவும் ஆலோசனை கூறவும் உரிமைபெற்றவர்கள். தற்சார்புக் கவிதைகளையும் படைத்தவர்கள். அரசவையும் தம்மை ஒத்த தகுதிவாய்ந்த புலவர் குழுவிலும் கலந்துகொண்டு புலமையை வெளிப்படுத்தியவர்கள். மானுட ஒழுகலாறு, ஒழுக்கம், நன்னெறிகளை மன்னனுக்கும், மக்களுக்கும் எடுத்துரைத்தவர்கள். புலம், அறிவு, கல்வி,